**இலங்கை கைப்பணிகள் சபை - 2019**

---

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை கைப்பணிகள் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணி சபையுடன் இணைந்த நிறுவன சட்டத்தின் 64(3) பிரிவின் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு

உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான கணக்கீட்டு நியமத்தின் 110 ஆவது பந்தியின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் படி கணக்கீட்டுத் தவறுகளை பிற்போட்ட ரீதியில் சீராக்கும் போது நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு கணக்கின் ஆரம்ப மீதிக்கு சீராக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான உரிமை மூலதன மாற்றக் கூற்று தயாரிக்கும் போது ரூபா 54,488,789 தொகையான முன்னைய ஆண்டின் தவறுகள் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்பு கணக்கின் ஆரம்ப மீதியில் சீராக்கப்படாமல் நடப்பாண்டின் சீராக்கமாக தனியான நிரலொன்றில் சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களுக்காக இந்த உரிமை மூலதன மாற்றக் கூற்று தயாரிக்கப்படும். | இந்த நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மொத்த வியாபார கடன்பட்டோர் மீதியான ரூபா 22,597,699 தொகையில் ரூபா 9,578,372 தொகை அறவிட முடியாக் கடனாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்காக பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அறவிட முடியாக் கடன் சீராக்கங்களுக்குரிய குறிப்புக்களின் உப குறிப்பில் இது மேற்கொள்ளப்பட்ட முறை காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையின் நிதிக் கூற்றுக்கள் (குறிப்பு 09) இன் பிரகாரம் இருப்புக்களின் கூட்டுப் பெறுமதி 637,430,580 ஆகும். அத்திகதியில் கணக்காய்விற்காக | இந்த வேறுபாட்டிக்கு காரணமாக விற்க முடியாதிருந்த பாதிப்படைந்த இருப்புக்கள், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,687,360 தொகையான இருப்பு பற்றாக்குறை மற்றும் | நிதிக்கூற்றுக்களை சரிசெய்து இருப்புக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட பௌதீக இருப்பு மெய்மெய்யாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் இருப்பின் பெறுமதி ரூபா 514,227,827 ஆக இருந்தமையால் நிதிக் கூற்றுக்களின் படி இருப்பு பெறுமதி ரூபா 123,202,753 தொகை அதிகரித்து பதியப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கில் இருப்பு பற்றாக்குறை என்பன காரணமாக இருந்தது. இந்த பற்றாக்குறை பல வருட காலம் முதல் முன் கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான அரசாங்கத்தின் வங்கியொன்றில் வங்கி நடைமுறைக் கணக்கு காசு புத்தகத்தின் பிராகாரம் மீதி ரூபா 51,414 ஆக இருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறான வங்கிக் கூற்றின் பிராகரம் வங்கி மீதி ரூபா 175,690 ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது இந்த வங்கி நடைமுறைக் கணக்கிற்காக வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கி மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் வழுக்களுடன் காணப்பட்டது. மீண்டும் மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைப் பெற்று சமர்ப்பிக்கப்படும். | சகல வங்கி கணக்குகளுக்காகவும் இணக்கக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 நிலையான சொத்து விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிராகாரம் கூட்டுப்பெறுமதி ரூபா 226,835,528 ஆக இருந்த போதிலும், சொத்து பட்டோலைகளின் பிரகாரம் அந்த சொத்துக்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 99,793,054 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுமொத்தமாக ரூபா 127,042,474 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | SAP முறைமையை அகற்றும் போது காணப்பட்ட மீதி அகற்றப்படாதிருந்ததுடன் சொத்துப் பதிவேடு 2018 இல் தயாரிக்கும் போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களுக்காகவும் பெறுமதியொன்றை வழங்கியமை வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது. | சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்களுக்காகவும் சரியாக சொத்துக்களின் பட்டோலை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபை கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பித்த பட்டோலையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற கடன்கொடுத்தோரின் கூட்டுமொத்தம் ரூபா 36,241,797 ஆக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இந்த செயற்பாடற்ற கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 3,616,379 தொகை ஏனைய கடனகொடுத்தோராக | SAP முறைமையில் இரண்டு கடன்கொடுத்தோர் கணக்குகள் உள்ளது. இந்த கணக்குகளுக்கு இடையே பழைய கொடுக்கல் வாங்கல்கள் JE ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையை இணங்காண முடியாதிருந்தது. எங்களது ஒரே கணக்கு வகையில் இரண்டு கணக்குகளுக்கு இடையே வரவு மற்றும் செலவு | நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரவு மீதியொன்று பதியப்பட்டிருந்தமையால் உள்ளபடியான கடன்கொடுத்தோரில் ரூபா 3,616,379 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | மீதிகள் தனித்தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | சபைக்குரிய வங்கி நடைமுறைக் கணக்கில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேலதிக பற்று மீதி ரூபா 233,662 ஆக பதியப்பட்டிருந்தது. டொலர்களில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற இந்த வங்கி நடைமுறைக் கணக்கின் மீதி ரூபாவிற்கு வழுக்களுடன் மாற்றப்பட்டமையினால் வருட இறுதி பெறுமதி ரூபா 237,897 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்நிய செலாவணிகளை ரூபாவிற்கு மாற்றும் போது ஏற்பட்ட இந்த தவறு 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | இந்த வங்கி நடைமுறைக் கணக்கின் மீதியை சரியாக கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் சபை செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) பெறுமதி ரூபா 26,498,593 ஆகும். அத்திகதியில் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த வரி பெறுமதி ரூபா 11,602,282 ஆக இருந்தமையினால் செலுத்த வேண்டிய வரி பெறுமதி ரூபா 14,896,311 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. | வரி தொடர்பான கடந்தகால தகவல்களுடன் கோவையொன்று நிறுவனத்தில் காணப்படவில்லை. நடப்பாண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பெறுமதியின் அடிப்படையில் வரி மீதி சீராக்கப்பட்டிருந்தது. எங்களது உள்ளபடியான வருமானத்திற்கு சமமான பிரகாரம் வரிக் கணிப்பிடப்பட்டுள்ளது. கடந்தகால பெறுமதிகள் கணிப்பிட்ட முறை தொடர்பான தகவல்கள் காணப்படவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி அறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சரிசெய்யப்பட வேண்டும். |
| (எ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் சபை செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) மீதி ரூபா 3,858,970 ஆகும். அத்திகதியில் உள்ளவாறு சபையின் கணக்குகளின் படி அந்த வரி பெறுமதி ரூபா 2,108,828 | எங்களது முறைமையின் பிரகாரம் வரி மீதி சரியான மீதியாக இருக்கும் என நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி அறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் சரிசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆனமையால் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் சரி பெறுமதி ரூபா 1,750,142 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கையின் பிரகாரம் சபை செலுத்த வேண்டிய வருமான வரி பெறுமதி ரூபா 20,811,536 ஆகும். அத்திகதியில் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த வரி பெறுமதி ரூபா 25,459,280 ஆக இருந்தமையால் செலுத்த வேண்டிய வருமான வரி பெறுமதி ரூபா 4,647,744 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வரி மீதியை உறுதிப்படுத்துவதற்காக நிறுவனத்தின் கடந்த கால தகவல்களுடன் கோவையொன்று காணப்படவில்லை. நிறுவனத்தின் வரி மீதிக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் மீதியை உறுதிப்படுத்தும் அடிப்படையில் நடப்பாண்டின் போதும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி அறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் சரிசெய்யப்பட வேண்டும். |
| (ஐ) | சபையின் கணக்குகளை வைப்பதற்காக SAP மற்றும் POS என்ற பெயரில் 02 கணனி நிகழ்ச்சித் திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றது. இந்த இரண்டு முறைமைகளுக்கு இடையே தகவல்களை பரிமாறுவதற்காக நாளாந்தம் சுயமாக செயற்படும் அதிகளவான நாட்குறிப்பு பதிவுகளின் எண்ணிக்கை கணக்கீடு செய்யப்படுகின்றது. எந்தவொரு நபரும் முன் வராமல் பதியப்படுகின்ற இந்த கொடுக்கல் வாங்கல்கள் மூலம் நாளாந்தம் காசோட்டிலும் நாட்குறிப்பு பதிவுகள் மூலமும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீடு செய்யப்படுகின்றது. தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 2019 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களின் போது காசோட்டின் வரவில் கூட்டு மொத்தமாக ரூபா 8,115,546 தொகையும், செலவில் கூட்டு மொத்தமாக ரூபா 42,776,136 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கான நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் அவற்றின் சரியான தன்மையினை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | இந்த JE நாளாந்தம் சுயமாக SAP மற்றும் POS முறைமைகளுக்கு இடையிலான தரவுகளை மாற்றுவதற்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நோரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கடன் அட்டை விற்பனை | 21,584,455 | 20,150,754 | 1,433,701 | இந்த நிலைமையை எங்களுக்கு கட்டுப்படுத்த முடியாதிருந்ததுடன், உரிய பணத்தை அறவிடுபவருக்கு இது தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆலோசனையின் பிரகாரம் சரியான தரவுகள் முறைமையில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் | 158,726,932 | 162,109,399 | 3,382,467 | பதிலளிக்கப்படவில்லை. | இது தொடர்பாக கண்டறிந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வியாபார கடன்பட்டோர் மீதி | 13,019,327 | மீதி உறுதிப்படுத்தும் சான்றுகள் | கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துவதற்காக எங்களினால் மீதி உறுதிப்படுத்தி கோரும் கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் பதில் கிடைக்கப் பெறவில்லை. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய கடன் அட்டை | 26,151,430 | நாட்குறிப்பு பதிவுகளுக்கான எழுத்துமூல சான்றுகள் | எங்களிடம் காணப்படுகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | தீர்க்கப்படாத முற்பணம் | 22,511,554 | முற்பண பட்டோலை | இந்த பெறுமதியில் 90 சதவீதம் பெயரளவில் இனங்காண முடியாத மீதியாக உள்ளது. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுத்தி வைத்தல் பணம் | 12,502,564 | உரிய எழுத்து மூல சான்றுகள் | 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற பெறுமதி இனங்காண முடியாதுள்ளது. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய வாடகை | 1,133,557 | பரீட்சிப்பதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் | 2011 ஐ விட பழைமையான இந்த மீதி தொடர்பாக எங்களிடம் எந்தவொரு தகவல்களும் காணப்பிடவில்லை. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அட்டுறு செலவினம் | 6,792,561 | பரீட்சிப்பதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் | எங்களிடம் வழங்குவதற்கு உள்ள தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டள்ளது. செலுத்த வேண்டிய தரகு பணத்தின் காலப் பகுப்பாய்வை பெற முடியாதுள்ளது. | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | நடைமுறை வேலை | 21,767,652 | பரீட்சிப்பதற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் | இந்த மீதி நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். | கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் மொத்த கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 22,597,699 ஆக இருந்தது. அந்த பெறுமதியில் கூட்டுமொத்தமாக ரூபா 9,144,104 தொகை 01 வருடத்திற்கு குறைவாக இருந்ததுடன், கூட்டுமொத்தமாக ரூபா 2,968,210 தொகை 01 வருடத்திற்கும் 02 | இந்த கடன்பட்டோர் மீதியில் உள்ள பழைய மீதிகளுக்குரிய பணம் எங்களுக்கு கிடைத்தமைக்கு எந்தவொரு எழுத்துமூல சான்றும் காணப்பிடவில்லை. | இந்த பழைய மீதிகளை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வருடங்களுக்கு இடையிலும், கூட்டுமொத்தமாக ரூபா 846,282 தொகை 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையிலும், கூட்டுமொத்தமாக ரூபா 9,639,103 தொகை 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன்பட்டோர் மீதியாகவும் இருந்தன. 03 வருடங்களை விட பழைய மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை.

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 338,037,482 தொகையான செலுத்த வேண்டிய வியாபார கடன்கொடுத்தோரில் 01 வருடத்திற்கு குறைவான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 141,489,979 தொகையும், 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,122,547 தொகையும், 02 வருடங்களுக்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 32,898,743 தொகையும், 03 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 117,526,212 தொகையும் ஆக இருந்ததுடன், இந்த நிலுவை கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த கடன்கொடுத்தோர் மீதி சாதாரண கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளின் பின்னர் செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்ட கணக்குகளாகும். அந்த இருப்பு விற்பனையின் போக்கு மற்றும் நிறுவனத்தின் நிதி நிலைமைக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | இந்த பழைய மீதிகள் தொடர்பாக கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 138 | 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 08 | உடன்படிக்கை அடிப்படையாகக் | இந்த நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உறுதிச்சீட்டுக்கள் பயன்படுத்தப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 3,427,952 கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த சில கொடுப்பனவுகளுக்கான பட்டியல்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 264 | இந்த நிதிப் பிரமானத்திற்கு முரணாக 2019 ஏப்ரல் மற்றும் மே என்ற 02 மாதங்களில் கொடுப்பனவுகள் 05 உறுதிச் சீட்டுக்களை பயன்படுத்தி கூட்டுமொத்தமாக ரூபா 3,119,438 தொகையை கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவுகள் பெறப்பட்டமைக்கு பெறுனர்களின் பற்றுச் சீட்டு பெறப்பட்டிருக்க வில்லை. | கடன் தவணைகளை செலுத்துவதற்குரிய பற்றுச் சீட்டுக்கள் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 751 | இந்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதியப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 07 உறுதிச்சீட்டுக்களை பயன்படுத்தி கூட்டு மொத்தமாக ரூபா 574,649 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருட் பதிவேட்டு பொருட்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இந்த நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் 21(1) ஆம் பிரிவு. | சகல வரி காலப் பகுதிகளுக்காகவும் பெறுமதி சேர் வரி அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 இன் முதலாவது காலாண்டிற்குரிய பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்ற நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 583,463 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான அறிக்கை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கணிசமான தொகையொன்றை செலுத்துவதற்கு உள்ளமையால் வரி கோவைகள் செயற்பாடற்று காணப்பட்டது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 100,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி எல்லையை விஞ்சி 2019 மார்ச் மாதம் 02 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 497,047 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | இவ்வாறான முற்பணங்களை வழங்குதல் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.3.1 ஆம் பிரிவு. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் சகல நிறுவனங்களுக்காகவும் ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வுகள் நடைமுறையொன்று காணப்பட வேண்டியிருந்த போதிலும், சபையில் 201 ஆன அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 பதவிகளுக்காக மாத்திரம் அந்த நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 9.3.1 (vi) மற்றும் (vii) ஆம் பிரிவுகள் | இந்த பிரிவின் பிரகாரம் 03 மாதங்கள் என்ற ஆகக் கூடிய காலப் பகுதிக்காக பதிற்கடமை நியமனம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015, 2018 ஆம் ஆண்டுகள் முதல் 2020 நவம்பர் மாதம் வரை சபையில் 05 பிரதான பதவிகளுக்காக பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் உரிய பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 9.14.1 மற்றும் 9.14.2 ஆம் பிரிவுகள் | இந்த சுற்றறிக்கையின் பிராகரம் பதவியணியினர் நடைமுறை விதிகள் தயாரித்து அதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | சபையின் நிதி கஷ்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 99,047,789 வரிக்கு முன்னராக இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 21,590,614 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 77,457,175 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக பிரதானமாக எமது கிராம சூழல்களை கையளித்தலின் அடிப்படையில் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 150,000,000 மானியம் ஒன்று கிடைத்தமை காரணமாக இருந்தது. சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகளை மீளாய்வுசெய்த போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானச் செலவினம் ரூபா 119,986,688 தொகையினால் குறைவடைந்திருந்ததுடன், நிதி செலவினங்கள் ரூபா 23,299,157 தொகையினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான கோட்டை லக்சல கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 04 மாடிகளை உடைய 44,000 சதுர அடி அளவான இந்த கட்டிடத்தில் 1500 சதுர அடி அளவு மாத்திரம் 2019 ஆம் ஆண்டு வரையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. கணிசமான பொருளாதார பெறுமதியுடைய இந்த கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமையினால் கட்டிடம் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்படுவதுடன், சபைக்கு வருடாந்தம் உழைக்கக் கூடியதாக இருந்த கணிசமான வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. மேலும், இது தொடர்பாக ICTAD நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தனியார் நிறுவனமொன்றில் இருந்து ரூபா 30 மில்லியன் தொகை கிடைக்க வேண்டியிருந்தது. சபையின் முகாமைத்துவம் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் தற்போது நிதி கஷ்டத்திற்கு முகங்கொடுத்திருந்த போதும் இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. மேலும் ICTAD நிறுவன அறிக்கையின் பிரகாரம் பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்த கட்டிடம் தொடர்பாக கண்டறிந்து அதனை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன், பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் கோட்டை லக்சல மற்றும் தும்புல்ல லக்சல என்பவற்றிற்காக கொழும்பு | இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை | உரிய ஆதன வரியை சரியான பிராகரம் |

| | | | |
|---|---|---|---|
| | மாநகர சபை மற்றும் நகர திறைசேரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ஆதன வரி குறித்த திகதியில் செலுத்தாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 2,121,196 தொகை தண்ட கட்டணமாக செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்ததுடன், அப்பணம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்படுகின்றது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஆதன வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் / பணிப்பாளர் நாயகம் பதவியின் ஒப்பந்த சேவைக்காலம் முடிவடைந்தமை மற்றும் பிரதான உள்ளக கணக்காய்வாளர் ஓய்வு பெற்றுச் சென்றமையினால் 2020 பெப்ரவரி மாதம் முதல் இந்த பதவி வெற்றிடமாக காணப்பட்டது. கணக்காய்வு செய்யப்பட்ட 2020 நவம்பர் மாதம் வரை அந்த வெற்றிடம் நிரப்பப்படாமையினால் உள்ளக கணக்காய்வு பிரிவு செயற்பாடற்று காணப்பட்டதுடன், சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தீர்மானம் எடுத்தல் என அநேகமானவற்றில் தாமதம் ஏற்பட்டிருந்தமை சபையில் இருப்பிற்கு பாதகமானதாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்த பிரதான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை இலக்கம் 374 என்ற வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் கூட்டுமொத்தமாக ரூபா 1,224,277 தொகை அதிகார சபைக்கு செலுத்த வேண்டி இருந்தது. சபையின் முகாமைத்துவம் செலுத்த வேண்டிய வாடகைப் பணத்தை வருடாந்தம் செலுத்தாமை மற்றும் தற்போது | 2020 ஆம் ஆண்டு முதல் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்ற நிதி கஷ்டத்தின் அடிப்படையில் இந்த செலுத்த வேண்டிய பணம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது செலுத்துவதற்கு முகாமைத்தவத்திற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | சபையினால் கொழும்பு மாநகர சபை மற்றும் நகர திறைசேரி திணைக்களத்திற்கு கோட்டை லக்சல கட்டிடம் மற்றும் தும்முல்ல லக்சல கட்டிடங்களுக்காக செலுத்த வேண்டிய ஆதன வரி கட்டணம் கால ரீதியில் செலுத்தப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவத்தின் நலிவின் அடிப்படையில் அவ்வாறு செலுத்தப்படாத ஆதன வரிக்கான தண்டப்பண கட்டணத்தை உள்ளடக்கி செலுத்த வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 12,756,777 ஆக காணப்பட்டது. | தற்போது காணப்படுகின்ற நிதி பிரச்சினைகள் தீர்ந்ததும் உடனடியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக கண்டறிந்து கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் கணக்குகளை வைத்தல் மற்றும் இருப்பு கட்டுப்பாடுகளுக்காக SAP என்ற பெயருடைய மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன், நாளாந்த விற்பனைக்காக POS என்ற பெயருடைய மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது. இந்த மென்பொருள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த மென்பொருளுக்குரிய தாய் கம்பனியுடன் சேவை உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சேவை உடன்படிக்கை நாளது வரையாக்கப்படாமையினால் இந்த மென்பொருள்களின் புதிய உள்ளடக்கங்கள் (New Version) மற்றும் விருத்தி செய்தல் என்பன இழக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் தரவுகள் Back Up ஆக வைக்க வேண்டிய போதிலும், அவசர சந்தர்ப்பமொன்றில் அந்த தரவுகளை முறைமையில் | சபையில் காணப்படுகின்ற நிதி பிரச்சினைகளினால் சேவை உடன்படிக்கையை நாளதுவரையாக்க முடியாதிருந்தமையின் அடிப்படையில் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | இது தொடர்பாக கண்டறிந்து பொருத்தமான மற்றும் தேவையான நடவடிக்கைகளை விரைவாக பின்பற்றுதல் பொருத்தமானதாகும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தமையினால் (Reinstallation) முறைமையில் காணப்படுகின்ற நிறுவனத்தின் தரவுகள் தொடர்பாக அதிகளவான ஆபத்தொன்று காணப்பட்டது. | | |
| (உ) | 2019 ஆம் ஆண்டின் போது உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பினுடன் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை குறைவடைந்தமையினால் சபையின் விற்பனை வருமானம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 119,986,688 தொகையினால் குறைவடைந்திருந்தது. எனினும், செலுத்த வேண்டிய வங்கிக் கடன் பெறுமதி 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் ரூபா 127,797,557 இனால் அதிகரித்திருந்தது. கணக்காய்வு செய்யப்பட்ட 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் வரையிலும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சுற்றுலா பயணிகள் குறைவடைந்தமையினால் விற்பனை வருமானம் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் 12 காட்சிக் கூடங்களில் 04 காட்சிக் கூடங்கள் மாத்திரம் திறக்கப்பட்டு 08 காட்சிக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன. இந்த நிலைமையில் சம்பளம் மற்றும் நாளாந்த செலவினங்களை செய்வதற்கு போதிளவான வருமானம் இல்லாமையின் அடிப்படையில் நாளாந்த செலவினங்களை தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரியில் இருந்து நிதி கோரப்பட்டிருந்தது. மிக விரைவாக விற்பனை வீழ்ச்சியடைந்திருந்தமையினால் சபை அதிகளவான நிதி கஷ்டத்திற்கு உட்பட்டிருந்தது. | சபை விலையிடல் உபாய வழிகளை ஈடுபடுத்தி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காகக் கொண்டு விஷேடமான பொருட்கள் விலையிடப்பட்டிருந்தது. எனினும் உள்நாட்டு நுகர்வோர்களை கவர்வதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. சஹ்ரான் குண்டு வெடிப்பு மற்றும் கொவிட் 19 நிலைமையின் அடிப்படையில் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் வருமானங்கள் வீழ்ச்சியடைவதற்கு உட்பட்டிருந்தது. 2019 இன் வருமானம் வீழ்ச்சியடைந்ததன் அடிப்படையில் கடன் செலுத்த முடியாமையினால் கடன்களின் மீள்ணிப்பீட்டினால் கடன் தவணை வட்டி அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் புதிய வழிகாட்டல்கள் மற்றும் உபாய வழிகளை 2021 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இந்த நிலைமை தொடர்பாக விரைவாக கவனம் செலுத்தி சபையில் காணப்படுகின்ற நிதிப் பிரச்சினைகளுக்காகு குறுங்கால் மற்றும் நீண்ட கால தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பிடுகின்ற ரூபா 25,467,530 தொகையான மீதி மற்றும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,571,317 பழைய மீதிகளும் காணப்பட்டது. இந்த பழைய கடன் மீதி தொடர்பாக கண்டறிந்து செலுத்துவதற்கு முடியாதிருக்குமாயின் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பழைய பெறுமதி தொடர்பாக எந்தவொரு தகவல்களும் எங்களுக்கு கண்டறிய முடியாமல் உள்ளது. | இந்த பழைய கடன் மீதி தொடர்பாக கண்டறிந்து செலுத்துவதற்கு முடியாதாயின் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 201 ஆக இருந்ததுடன், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 130 ஆனமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 71 ஊழியர்களின் பற்றாக்குறை காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சிரேஷ்ட மட்டத்தில் 20 பதவிகள் காணப்பட்டதுடன், அந்த பதவிகளுக்கு இடையே 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. | உரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை அங்கீகரித்தன் பின்னர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் விற்பனை பிரிவிற்காக 06 நோக்கங்களும், மனித வளங்கள் மற்றும் நிர்வாக பிரிவிற்காக 05 நோக்கங்களும், நிதி பிரிவிற்காக 05 நோக்கங்களும், தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக 06 | உங்களது அறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் அறிக்கை திட்டமிடப்பட்ட பிரகாரம் மதிப்பீடு செய்வதற்கு முடியுமான வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நோக்கங்களும், உள்ளக கணக்காய்வு பிரிவிற்காக 04 நோக்கங்களும் மற்றும் பெறுகைகள் பிரிவிற்காக (Supply Chain) 05 நோக்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும், செயலாற்றல் அறிக்கை திட்டமிடப்பட்ட பிரகாரம் தயாரிக்கப்படாமையின் காரணமாக உரிய நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றத்தை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்காக சபை தயாரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு உரிய ஆண்டுகளின் போது நிறுவனத்தினால் அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகள் காண்பிக்கப்படாமையினால் ஆண்டின் இறுதியில் செயலாற்றல் அறிக்கையுடன் ஒப்பீடுசெய்து பௌதீக மற்றும் நிதி செயல் முன்னேற்றங்களை இனங்காண முடியாதிருந்தது. | தரமான இலக்குகளின் பௌதீக செயல் முன்னேற்றத்தை காண்பிக்க கூடியதாக இருந்த போதிலும், நிதி செயல் முன்னேற்றத்தை காண்பித்தல் வசதியீனமான இருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்காக சபை தயாரித்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 15 நோக்கங்கள் உரிய காலப் பகுதியில் திட்டத்தின் பிரகாரம் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதி ஏற்பாட்டை வழங்குவதற்கு வசதியீனமாக இருந்தமை, வருமானம் குறைவடைந்தமை போன்ற காரணங்களின் அடிப்படையில் இந்த நோக்கங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிறுவனத்தின் நிதி இயலுமையை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையில் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 16 செலவின விடயங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 11,044,024 தொகை பாதீட்டு மதிப்பீட்டை விஞ்சி செலவினம் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 16 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட நிதியினை விஞ்சி செலவிடப்பட்ட உள்ளபடியான செலவின முரண் 0.04 சதவீதம் முதல் 61.25 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. பாதீடு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2019 இன் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன், சஹ்ரான் குண்டு வெடிப்பின் பின்னர் வருமானம் வீழ்ச்சியடைந்து சென்றதுடன், திருத்தப்பட்ட பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. திருத்தப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டை விஞ்சி செலவினங்கள் செய்யப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு எல்லையில் நிறுவனத்தின் செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |